உ

சிவமயம்

திரிசிராமலைத்

3969 (8117)

# தாயுமானேஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி.

இஃது

தென்பேறுபுதுப்பாளயம்

வேங்கடாசலமுதலியா

ரவர்களால்

பரிசோதிக்கப்பட்டு

திரிசிரபுரம் - உப்புகார

சிதம்பரபிள்ளையவர்கள்

கேட்டுக்கொண்டபடி

திரு- அப்பாவுமுதலியார்குமாரர்

வேங்கடாசலமுதலியா

ரவர்களால்

தேசாபிமானி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பராபவ௵ மாசிமீ

சென்னை ௲௮௱-அ.

உ

சிவமயம்.

# சாத்துகவிகள்.

திரிசிரபுரம்

## மீனாட்சிசுந்தரம்பிள்ளைபாடியது.

துரிசிராதடியர்களையெடுத்தாண்டு - - - *
பவமாற்றிச்சுகமேநல்குந் - - - *
திரிசிராமலையாற்குப்பதிற்றுப்பத் - - - *
தந்தாதிசிறப்பாச்செய்தான் - - *
யரிசிலாப்புகழ்ந்தோருக்கமுதூற்றிச் - - - *
செழுங்கந்தம்பரந்துவீசுங் - - - . *
கரிசிலாவியலொடிலக்கியமுணர்ந்த - - - *
நாகமுத்துக்கவிஞன்றானே. - - - - *

தென்னூர் - இருளாண்டியுபாத்தியாயர்பாடியது.

வாகமுத்துவளைவில்கணையிருந்தொவிரு - *
மதிமுகத்துமடந்தைபாகன் - - - - *
ஆகமுத்துகவிலன்பர்பரவுசிரா - - - - *
மலைநாதனடிமென்போதி - - - *
னாகமுத்துப்புலவனுரைபதிற்றுப்பத் - - - *
தந்தாதிநயந்துகேட்போர் - - - *
பாகமுத்துறையைக்கடந்துமேலாய - - *
துறையதனைப்பற்றுவாரோ. - - *

திரிசிரபுரம் - சோமசுந்தரமுதலியார்பாடியது.

சிரகிரியாந்தென்கயிலைமலைத்தலையின் - - *
முளைத்தெழுந்ததேவதேவன் - - *

பரவுமிசைக்கடன்முழுதுமந்தாதிப்
பிரபந்தப்பாண்டத்துய்த்தான்
றிரமருவிபுகழிந்துதேசவிரா
ஜத்தானிதிகழ்நூற்சங்கப்
புரவலருமிரவலரும்பரவிமகிழ்
நாகமுத்துப்புலவன்றானே.

பாலக்கரை-வீரராகவசெட்டியார்பாடியது.

விண்ணவருந்தவளமலர்வாணிகேள்
வனுமாலும்விருப்புமேன்மை
நண்ணவருந்தவர்சூழுஞ்சிரகிரியந்
தாதிதனைநறுஞ்சொற்செந்தே
னுண்ணவருந்தவலருமுருதெக்கவையு
நவையறக்கற்றுணர்ந்தோர்யாரு
மெண்ணவருந்தவலருஞ்சீர்நாகமுத்துக்
கவிவாணனியம்பினனே

திரிசிரபுரம்-நீலகண்டம்பிள்ளைபாடியது.

சேணுலவு பொன்னஞ் சிகரச் சிராமலைவாழ்
தாணுவினுக் கந்தாதி சாற்றினன் - மாணுலவு
பாகமுற்ற செஞ்சொற் பனுவற் பொருளுணர்ந்த
நாகமுத்துப் பாவாண னன்கு.

திரிசிரபுரம்-அஷ்டாவதானம்
சுப்பராயசெட்டியார்பாடியது.

இறங்குதிரைக்கடலுலகநாடுபொருட்
செல்வமொடுகல்விச்செல்வம்
பிறங்குதிருநதிகுலத்தானாகமுத்துப்
பெரும்புலவணருவியோங்கி
யிறங்குதிரிசிரகிரிவாழிமையமலை
மகட்பாகனரிகளெல்லாந்
திறங்குலவுபரியாகப்புரிந்தோருக்
கந்தாதிசெப்பினனே.

திரிசிரபுரம்- சரவணவுபாத்தியாயர்பாடியது.

பொன்னருநவமணிசேர்பரிபுரத்தா
விணைமலரைப்புந்திதன்னின்
மன்னரும்பதம்பெறவேகருணைதரும்
பரையிடமாய்வளருமேரின்
மின்னருஞ்சிரகிரிச்செவ்வந்தீசர்
பொற்பதத்தில்விரங்கவேதான்
றுன்னரும்புகழ்நாகமுத்துவள்ள
றமிழ்மாலைசூட்டினனே.

திரிசிரபுரம் -ஒப்பிலாமணிஉபாத்தியாயர்பாடியது.

இத்தரையிற்புலவர்களுக்கரசனென
வேவிளங்குமினிமையான
முத்தமிழ்தேர்நாகமுத்துக்கவிராஜ
னல்லன்புமுகிழ்ந்தவாக்கா
லத்தியுரிபோர்த்தசிரகிரிவாழும்
பெருமானுக்கருமையாய்ச்செய்
வித்தகஞ்சேர்பதிற்றுப்பத்தந்தாதி
வியப்பதனைவிளம்பொணாதே.

கற்குடி-மதுரைமுத்துப்பிள்ளைபாடியது.

இந்தப்பாடரவணிந்தோன்முத்தலைவெற்
பினிலமர்ந்தோனிறைவனார
விந்தப்பாதங்கவின்மேனாகமுத்துக்
கவிராஜன்மிலைந்தவாதி
யந்தப்பாவொருநூறுமாரும
லனுதினமுமறையினன்மோட்
சந்தப்பாமற்கிடைக்குமகரால
யம்புடைசூழ்தரணியோரே.

தாங்கம்பாடி -குருவப்பநாயகர்பாடியது.

ஆராமலைப்பத்திகிரிதொடுங்கரணைநிகர்
நாகமுத்துக்கவிவல்லோனன்
விராமலைப்பக்கதிர்வாளாற்றுமிக்குமிலங்
கொளியிரவிமயங்கத்தேங்கொள்

குராமலைப்பச்சையந்தாதிற்குடைந்தவிதென்
 னிடுங்கமழ்பூஞ்சாந்துமோங்குஞ்
சிராமலைப்பண்ணவனுவப்பத்தெருட்டருமந்
 தாதியொன்றுசெப்பினனே

திரிசிரபுரம் முத்தையவுபாத்தியாயர்பாடியது.

அக்காலத்தொருவிடையாய்த்தாங்கினமா
 தவனந்தமிவிடையதாகித்
திக்காரும்பொன்மதின்மீதிருந்துதவம்
 புரியுமுயர்சிரவெற்பீசர்
மிக்காரும்பதமலரினுகமுத்துப்
 பாவலன்மேன்மேலுமன்பா
யெக்காலத்தினுமழியாத்தமிழ்மாலை
 சூட்டியவாறென்சொல்வேனே.

சிந்தாத்திரிப்பேட்டைமுத்துசாமிநாயகர்பாடியது.

உள்ளத்தெவிவுறுதித்தெளிவுகனிந்தொழுகுமின்ப
வெள்ளத்தெளிவுவேதத்தெளிவுமெய்விதேயமுத்தி
கொள்ளத்தெளிவுகவிநாகமுத்துநற்குணேசன்செய்த
வள்ளற்சிராமலையந்தாதியைச்சொலவாய்த்திடுமே.

---

## சாத்துகவிகள்

முற்றிற்று.

ஹர:

ஸ்ரீ

# திரிசிராமலைத்

# தாயுமானேஸ்வரர்

# பதிற்றுப்பத்தந்தாதி.

## விநாயகர்ஸ்துதி.

பண்ணவர்போற்றுஞ்சிராமலைப்பதிற்றுப் .......................*
பத்தந்தாதிக்கவியலங்க ........................................*
லண்ணலர்புரங்கடூயெழநகைத்த ....................................*
நாதனுந்தாயுமானவனாற் .........................................*
றண்ணலர்சரணம்புயமிசைச்சாத்தத் .................................*
தானமர்றெனப்பொழிபுழைக்கை ......................................*
யண்ணலோர்கோட்டுமழவிளங்களிற்றி . ..............................*
னடிமலர்முடிமிசைப்புனைவாம் .....................................*

## தாயுமானேஸ்வரர்ஸ்துதி.

நறுங்களபத்தனமடவார்திருநடஞ்செய் ...............................*
சிரகிரிவாழ்நம்பனென்று .........................................*
மூறுங்கயிலைப்பெருமான்றாயானவன்வெள் .............................*
விடையானெம்முடையான்யாரும் .....................................*
பெறும்பொருட்டின்னருள்சுரக்கும் .................................*
பெம்மான்சிற்பரனுதன்பெருமையாவை. ...............................*
குறுங்குறுமாமுனிதுதிக்குமாதேவ .................................*
னடிமுடிமேற்கொண்டுவாழ்வாம். ...................................*

## மட்டுவார்குழலியம்மைஸ்துதி.

வேலையுறழ்விழியாளைக்குழையிலகுஞ்செவியாளை வெண்ணீ
ற்றாளைச் - சோலையின்மாங் குயில்பாடுஞ் சிரகிரிவா ழுமை
யாளைச்சுரும்பார்கொன்றை - மாலையணிந் தோனிடத்தில
மர்ந்தாளையுவாமதிபோல்வதனத்தாளைப்- பாலைநிகர்மொ
ழியாளைமட்டுவார்குழலாளைப்பணிதல்செய்வாம் ............*

செவ்வந்திவிநாயகர்ஸ்துதி.

ஐந்தருநீழல்வாயமருமிந்திரன் ......... ...... ... ............ *
வந்தனைசெயுஞ்சிராமலையின்மேவுசெவ் .... ......... ...... .. *
வந்தியானையினிருமாமலர்ப்பதஞ் ... ........ ........ ........ *
சிந்தையாற்றொழுதுமேற்சென்னிசேர்த்துவாம் ........ ..... *

சுப்பிரமணியர்ஸ்துதி.

சூர்தடிந்திமையவர்சுவர்க்கம்பெற்றிடத் ............... ... ... *
தார்புனைவேல்விதிர்சண்முகன்குகன் ........ ...  ....... ..... *
பார்புகழ்சிராமலைப்பதியிற்கந்தனற் ........ .... ............. *
சீர்பெறுமடிமலர்ச்சிரத்திற்சேர்த்துவாம் ....................... *

சைவசமயாசாரிகள்ஸ்துதி

அங்கம்வனப்புறுமங்கையாக்கியருள்கவுணியன்றன் ... .....*
றுங்கமலர்ப்பதம்பரவித்துதிநாவுக்கரசனற்றாள் .... ...... . . . *
பங்கமறவணங்கியாரூரனிணைக்கழல்பணிந்து ................*
புங்கமுறுவாதவூர்ப்புனிதனடிபோற்றுவாம் ........ ........ *

அவையடக்கம்.

அருமருந்தன்னபிள்ளையென்றுரைப்ப தருமந்தபிள்ளையே
யென்ன - வருமரூஉமொழியிற்பொருட்சிதைவின்றுய்வயங்
குதல்பற்றிக்கொள்சான்றோர் - தெருமருமனத்தேன் சிராம
லைப்பிராற்குச்செப்புபாடலிலுளச்சிதைவு - பெருகினுமந்
தப்பொருட்சிதைவிலாதப்பெற்றியார்கொள்வதுவழக்கே *

நூல்.

சீர்வளர்பூங்காவனம்புடையோங்குஞ்சிரகிரிமட்டுவார்குழலி*
வார்வளர்குவிமாமுலையுமைப்பாகாவரதனேதாயுமானவனே
பேர்வளர்மெய்ஞ்ஞானப்பெருவெள்ளம் பெருக்கியென்னு
ளத்திடைக்குடிகொண் - டேர்வளர்நின்றாமரைப்பதங்காட்
டியிறைஞ்சிடக்கருணைசெய்குவையே ........ ............ (௧)

செய்தவநால்வர்க்கன்றுபதேசஞ்சேணுயர்வடநிழலிருந்து
பொய்தவநவின்றுபொறிவழிமனத்தைப்போக்கிநின்றுழ
ல்கொடியேற்கின் - றுய்வழிகூடவுணர்வளித்தருள்பொன்
னொளிர்சிராமலைப்பெருமானே - நெய்வழியயில்வேற்குமர
னையீன்றநிமலவென்றனக்கினாரமுதே ...... .................. (௨)

ஆரமுத்தகிற்பொன்னலைக்கரத்தெறியுமாழிநேர்பொன்னி
நாட்டீசன் - பாரமுத்தலைவேலங்கையிற்றாங்கும் பரமனந்
தாயுமானவனை - யீரமுற்றனுசார்புலையரோயெவர்களாயி

னுமிருண்மலவலியால் - வீரமுற்றினுநாரணன்பெருக்கழற்
பான்மேவினனென்னையாள்பவரே... ........ ........ ..........(௩)

என்னையாள்பவனைமழவிடையவனை யேகமானவனைமுண்ட
கம்வாழ் - பின்னைகேள்வரும்வெண்சலசமாதுவக்கும் பிரம
ருமமரர்மாதவரு - முன்னைநாட்டொடக்கையகற்றுவானைத்
துமுதல்வனைமட்டுவார்குழலி - யன்னையாளுடன்கண்டனனை
கமகிழவஞ்சிராமலையினின்மாதோ ... ........................ ..(௪)

மலைமகளொருபான்மணந்துலகளித்த மகேச்சுரன்றிரிபுரத
கனன்- கலைபுகழ்மதிச்செஞ்சடைமுடிப்பரமன்கனகமார்சிர
கிரிப்பெருமா - னலையசையோதமுதித்தகார்விடமுண் டம
ரரைக்காத்தவித்தவனென் - றலைமிசைதனது மலர்ப்பதஞ்
சூட்டித்தமிழ்ச்சொலவரமளித்தனனே ........ ..........(௫)

அளியினமுராலுங் குழலியர்மயலா லலமராவுழலுநெஞ்சலை
யாள் - நளிமலர்த்தடஞ்சூழ்சிரகிரிவாழு நாதனேகங்கைவே
ணியனே - களிமயினடத்துங்கந்தனையீன்ற கறைமிடற்றி
றைவனேயயன்மா - லியுடன்போற்றுமையனேசிவனேய
ணியுறுமமரர்கோமானே.... .................... ........ ......... (௬)

மான்மழுச்சூலமுடுக்கணிகரமும்வாளராக்குண்டலச்செவியுந்
தேன்வழிந்தொழுகுங் கடுக்கையங்கண்ணித் திங்கடங்கங்கை
யார்சடையும்- வான்விழிமூன் றுங்கழற்பதத்திணையும்வளர்
சிராமலையனின்னகையுங் - கான்வழிவதனும்புயமுமென்றன
க்கோர்களிப்பினைத்தருமுயிராமே..... ... ......... ..........(௭)

உயிர்க்குறுசுவையா முடலையோர்பொருளா யோம்பிநா
டொறுமுணமறந்து - செயிர்க்குடன்படுமென் னகத்தை
யேதிருத்தித்திருவடிப்பேறெனக்கீவாய்த் - தயிர்க்குடமவா
வுமரவணைத்திருமாறாழ்ந்திடுஞ்சிரகிரிக்கரசே - யயிர்க்குயி
ன்மொழியாள்சுகந்தகுந்தளநாயகியுடனமருமுக்கணனே (௮)

முக்கணனெடியமான்முதலானோர் முறையினின் றடிதொழு
திடும்வெள் - ளக்கணங்கரவும்புனைசிரகிரியா னயில்விழிமட
ந்தையர்மாலாற் - றெக்கணக்கருபமுதல்வனீளத்தஞ்சிக்கிடா
தெனையடியரிற்கொண் - டிக்கணம்பிறவா நெறியினைக்காட்
டியெய்திடாவின்பநல்கினனே...... ........... .... ......... .... (௯)

நல்வெழிலமரர்மாதர்தஞ்சுகமூநறைமலர்க்கற்பகநிழலும் .. ❋
மல்லெழிலனைமாதங்கமூங்காமதேனுவும்வளர்நிதிக்குலையு
ஞ் - சொல்லெழிலெனவெள்ளவூவுநெஞ்சினில்யான்றுதித்தி
டேனின்கழலன்றி வில்லெழிலுயர்பொற்சிரகிரிமேவும்வி
த்தகவிளங்குமாமணியே .............................................(௰)

[வேறு]

மணியேமணியினொளியேயென் மதியேமதியுட்சுடர்விளக்கே
திணிசேருமபலுரிபோர்த்த தேனேசிரவெற்பமர்வோனே ❋
தணியாக்காமக்கொடுந்துயர்க்கேதளராவண்ணமெளியேனின்
பணியேபுரியவரமளித்துன்பதமாரமுதமருள்வாயே...(௰௧)

ஏயுங்கிளையுமீன்றருமினியமனையும்பெருவாழ்வுஞ்.... ...❋
சேயுநிலையென்றெணுங்கொடியநீயேன்பரிக்கும்பெருஞ்சுமையாஞ்..............❋
சியுநாம்புஞ்செறிதசையார்தீண்டாநாற்றமிகுமூபலைப்.....❋
பேயுநாயுமுணுமுனம்வந்தெனையாள்செவந்திப்பெருமானே

பெருமான்சுகந்தகுந்தளமாதேவிக்கினியபெம்மானம்.......❋
மருமாமறையோதிடுமிறைவனுலிகாலமயின்றபிரான்....... ❋
திருமாதுறைமார்பனுமயனுந் தினம்வந்தேத்துஞ்சிரகிரியா
னிருமாமலர்ச்சேவடிதொழுவாரொன்றும்பிறவாநிலையினரே

நிலையாவுடலச்சுமைபரித்துநின்றேபுலம்பும்வஞ்சகனை .. ❋
யுலையாவண்ணமெடுத்தாள்வாயுமையாள்பங்கிலுறைவோனே
யலையாறருகுமதியிதழியணிவேணியனேசுவைக்கரும்பே ❋
சிலையாமலையைவளைத்தசிராத்திரிவாழ்முக்கட்செழுங்கனி
[யே(௰௪)

கனியுங்காயுங்கிழங்குண்டுங்கானிலுறைந்துங்கதிநாடிப்... ❋
பனியும்வெயிலும்படவுடலம்பலைதக்கநுனியூசியினின்று..❋
நனியுமருமாதவம்புரியுமுனிகாள்பொதுவினடித்தபிரா ..❋
னினியசிரவெற்பினிலடைந்தேயேத்திவணங்கப்பெறுவிரே.

வீரம்விளையுமெய்ஞ்ஞானவிளக்கமிகும்பொல்லாவுடலாம்❋
பாரந்தொலையும்யானெனதென்னும்பற்றறுநற்பலன்பெரு
கோரமுலையுமடமாதர்கொடியவாசைப்பெருக்கொழியு[குங்
மாரமலையுஞ்சிரகிரியானடிமாமலர்க்கன்புடையார்க்கே(௰௬)

உடையார்மறைதேடுதற்கரியவுமையாட்கினிமையுயரிளவெள்
விடையார்பொதியமுனிக்கருளும்விமலரிதழிநதியணிசெஞ்❋

சடையார்சிரவெற்பமர்தேவர்சகசங்காட்டிநிலைகூட்டி .....*
நடையார்பரமானந்தவின்பநல்கியெனையாண்டருள்வாரே.*
...................................

அருளேயெவர்க்குமரும்பொருளேயடியாரகமாமலரமருந்*
தெருளேவளருஞ்சிவக்கொழுந்தேதேனேமுக்கட்செழுங்கனி
யே-யிருளேயகற்றுஞ்சிரகிரியாயெந்தாயென்னுணிலையொ
ளியே - மருளேயனையாருறவகலவந்தேகொடுத்தாள்வரமெ
[னக்கே (௰௮)

னக்கித்தீயபிறப்பிறப்பாமிடர் நீர்ந்தொழியச்சுரர்வணங்கு
மூனக்கன்பொடுநான்பணிவிடைகளொருங்கேதாளுஞ்செயவருள்வாய் ........*
வனக்குஞ்சரமாமுகற்குவந்து மருமாங்கனியன்றளித்தவனே
கனக்கும்பசனுதியர்தொழுமுக்கணனேசிரவெற்பமர்சிவனே

சிவனேவணிகர்மரபில்வருஞ்சீரார்மடவாட்குத்தாயா .......*
னவனேசென்னிவளையானேநம்பர்செவந்திநாயகனே.......*
பவமேயியற்றியுடல்போற்றும்பாவகாரிநிலைவணங்கா ....*
தவமேதிரியத்தகுமோதாளையாயுன்றுண்மலர்தந்தே.. (௨௰)

[வேறு.]

தந்தியுரிபோர்த்ததாயாலவனேசெவ்........... ........ ......*
வந்திமலர்க்கொண்டுன்னடிப்போதந்நாட்டுதித்த............*
வந்தமுறுசாரரற்கரும்பேறளித்தமுக்க.... ........... ..........*
ணெந்தையேபந்தவினையென்றெனக்குத்தீர்ப்பாயே (௨௧)

நீராப்பிறவித்திரைக்கடனின்றேறுதற்குச் ..... ...........*
சீரார்புனையாநின்சேவடியைக்கைக்கொண்டேன்............*
நாராயணனயனுநாடும்பெருமானே ... ...... ......... .... ... .....*
வாரார்சிராமலைவாழ்மாசிலாமாமணியே............... (௨௨)

மாசுற்றநெஞ்சனுனைவாழ்த்திமிக்கப்போற்றுமற்..............*
காசுற்றமங்கையர்தங்கண்வலையிலேயகப்பட.... ...... ...... ...*
டாசுற்றயர்நாயடியேற்கிரங்கியருள் ........; .......................*
தேசுற்றசேர்திச்சிராமாமலைக்கொழுந்தே. ....... ... .....(௨௩)

மலைவுசெயுமும்மலநோயினுன்மலிவா..................... .... ... *
யலைவுபடுநெஞ்சனுனையடைவதெக்காலி .............................*
நிலைவளருஞ்சிந்தாமணியேநிராமயனே ............................*
தலைவளருஞ்சென்னிவளாக்கண்வாழுமுன்னேனே......(௨௪)

மூன்னூர்சுரிதிருமுடிமீதுறைசுடரோ..........................*
யின்னூரமுதேயெழின்மாநிதிக்குவையே......................*
என்னுபகமேயெணயாளிலஞ்சியமே.................................*
பொன்னூர்சிரகிரியில்போந்துயிர்த்தாயானவனே......(உரு)

ஆனசிராமலைவாழையனேயங்கணனே...............................*
வானவராக்காத்தாண்டுமாபாதகராகுந்.............................*
தானவரைக்கொன்றதயாபரனே நாயேனை ........................*
மீனவிழியார்வலைக்குள்வீழா தெடுத்தருளே,..........(உசு)

அருண்மேவுநின்றனடிமாமலர்பற்றுந்...........................*
தெருண்மேவுமின்பஞ்சிறியேற்களித்தருள்வாய்...............*
பொருண்மேவுமாடம்பொலியுஞ்சிராமலைவா.....................*
மிருண்மேவியகண்டனென்னுந்தாயானவனே...........(உள)

தாயானசெல்வத்தகைமணியேயெம்பாருங்...........................*
காயாமலர்வண்ணன்காணாப்பெருமானே...........................*
தீயார்நரகிற்சிறியேன்புகாதவணை ..............................*
மாயாப்பேரின்பவாழ்வெனக்குநல்காயே................(உஅ)

ஆய்நோயகனுமழல்போலெழுங்கொடிய............................*
காய்வெம்பசிகூர்கழியும்விடாய்தணியும்......................*
வேய்நேருந்தோளார்விழைவொழியுமெஞ்ஞான்றும்..........*
போய்நீள்சிரகிரியான்பொற்றாள்வணங்கினர்க்கே.......(உகூ)

ஏனமாயும்வெள்ளெகினமாயுமிருவர்..............................*
போனநாளாதியினம்பொருந்தாக்கழலமுதை.....................*
யீனனுந்தீயேற்கிரங்கியருள்வாய்முக்கண்..................*
வானவனேதெம்மட்டுவார்குழலிநாயகனே...............(௩௦)

[ வேறு. ]

நாயகன்றிரிபுரமெரிபடச்சிறுநகைபுரிந்திடுநம்பன் ..[ணன்
றாயகங்கைவெண்மதியிதழியந்தொடைசூடுசெஞ்சடையண்
மீயகந்தருசிரகிரிச்சிவனிருவிரைமலர்ப்பதம்போற்றித் ..*
தீயகம்புகாவணமருளடைந்திடச்சிந்திப்பாயுளநீயே...(௩௧)

உளஞ்செந்தீயிடுமெழுகெனவுருகநின்றுன்மலரடிநச்சா..*
திளம்பிடிச்சிறுமடநலார்க்குருகுமென்னிருள்வினைத்துயர்
போக்காய்- களங்கொளுங்கண்டனேசிவலோகனேகங்கைவா

ழ்சடையானே - வளம்பெருக்குநீடண்டலைசூழ்சிராமலைவ
ளர்தருங்கோவே ........................................ (௯௨)

கோதமன்னகத்தியன்முதலியர்தொழுங்குருமணிச்சிரநாக. ❋
ஞுதநூபுரமணிபதத்தியர்தினநடமிடுந்திருக்கோயி.... ..... ❋
ஞுதனஞ்சுமிழ்பணியணிநிமலன்றுணலமுடனருச்சித்தோர் ❋
வேதனாரணனிந்திரற்கரியநல்வீடுறப்பெறுவாரோ...... (௯௩)

விடுமக்கள்பெண்டீர்நிலையெனவெண்ணிவிருப்புறுமடநெஞ்சே
கூடுவிட்டுயிர்போனபின்னிவர்களைக்கூடிடப்பெறுவாயோ
நீடுநித்தியவாழ்வினையடையநீநித்தமன்பொடுபோற்றிக் ❋
கூடுநற்சிரகிரிச்சிவனடியருள்கூர்ந்துதந்தருள்வானே (௯௪)

தந்தமாமுகத்தானைவேன்முருகனைத்தந்தவெள்விடையானே
கந்தமாமலர்விரிபொழிற்சிரகிரிக்கடவுளேநினையன்றிப் ❋
யந்தமாவினைமிகநெருக்குறவுறப்படுந்துயர்க்காளாயே ❋ [(௯௫)
நொந்தமாதறுகணன்றொழுதயவொருநுவறெய்வங்காணே

காணக்கண்ணிலந்துதிசெயநாவிலங்கருதிடமனமில்லம் ... ❋
வாணற்பங்கயமணையநின்றுவன்றிமறந்துமாறுள்ளாரை ❋
மாணப்பம்மதியறுகணிசடையவெண்மணிசொரிவளைமேயுஞ்
சேணப்பின்றடப்பங்கயவாவிசூழ்சிரகிரிப்பெருமானே (௯௬)

மானவேல்விழிமடந்தையரியற்றிடுமையல்வாரிதிமூழ்கித் ❋
தானதன்மமுஞ்செபதவவோமமுந்தவறுறத்தினந்தோறும்
போனபாதகன்மலச்சிவையுருக்கிநின்பொற்பதந்தொழச்செ
ய்வாய்- வானமார்கநம்விழிதுயிலுயர்சிராமலைவளர்பெருமா
[னே (௯௭)

மான்றரித்தசெங்கையனேமெய்யனேவளர்சிராமலைத்தேவே
கான்றரித்தபூங்கொன்றைமாலிகையனேகடுவமர்மிடற்றோனே
வான்றரித்தமின்னிடையவள்பாகனேவயங்கருளருள்வாயா ❋
தூன்றரித்தமெய்ச்சுமைபரித்தணங்குறுழல்மயற்கழியாதே

அழிந்திடும்முடைக்காயம்வாராதுநல்லருணினாற்பெறுவேனே
கழிந்திடுங்கருமேதிமேல்வருபவன்கயிறுறப்பநிம்வாதை[த்
பொழிந்திடும்மறுசமயபேதங்களுமுடன்பெயர்ந்தெனைவிட்டே
பொழிந்திடும்மணிக்காவிரிப்புடைவளர்பொற்சிராமலையானே

மலைவளைத்தவில்லாளனே திரிசிராமலையமர்சிவனேவார் ...*
சிலைவளைத்தனேர்புருவமாதர்க்குழன்சிக்கிடாதெடுத்தேதநன்*
னிலைவளைத்தநின்பாததாமரைநறுநீழல்வைத்தெனையாள்வா
யலைவளைத்தவிப்புவியினியன்றியெற்கார்துணையாவாரோ ௪௰

[வேறு.]

வார்முலைக்கண்ணியர்மயலாற்சுகஞ் .......................*
சேர்நிலைமைச்சிறிதுமுருமனின் ..............................*
ஞர்புலன்கழற்றுள்ளடைந்தேனையாள் ..........................*
சீர்புலனபொற்சிரகிரிச்செல்வனே .............................(௪௧)

செல்வமொன்றுஞ்சிறந்தவமொன்றுமம் .........................*
மல்வளம்பதிமன்னவமொன்றுமிச் ................................*
சொல்லுளோர்நின்றொழும்பர்க்கிடாவமோ ......................*
செல்வனன்றொழுஞ்செவ்வந்திநாதனே ..........................(௪௨)

நாதநூபுரக்காலியர்நட்பினாற் ....................................*
போதவாடிப்புலம்புங்கொடியவிப் ..................................*
பாதகனுய்யப்பார்த்தருளாய்முக்கண் ..............................*
ணுதனேசிரநாகம்வாழையனே ......................................(௪௩)

ஐயனேசிவனேயருளேசனே ............................................*
மெய்யனேசிரவெற்பமர்தேவனே ....................................*
துய்யமாமதிசூடியநாதவென் ........................................*
வெய்யதீவினைவீழ்த்திடவேண்டுமே ..............................(௪௪)

வேண்டுநித்தியமெய்ப்பொருளுயினேற் .............................*
காண்டுகொண்டருளாய்ப்பரஞ்சோதியே ............................*
நீண்டுவான்றொடுநெற்பயிர்மாமதித் ...............................*
தீண்டுசோலைச்செறிசிரநாதனே ...................................(௪௫)

நாகமாமனநாடிப்பொறிவழிப் ..........................................*
போகவிட்டுப்புலம்புகின்றேனையாண் ...............................*
மாகமார்மணிமாளிகைசூழ்சிரா ......................................*
நாகனேகயிலைப்பதிநம்பனே .........................................(௪௬)

நம்பிடேனுனைநாளுந்துதித்திடேன் ..................................*
கும்பிடேனுயர்கோயிலுஞ்சுற்றிடேன் ................................*
வெம்பிடேன்வினையேனெவ்வாறுய்குவேன், ..........................*
றம்பிரானேசிரகிரித்தாணுவே .........................................(௪௭)

தாணுவேசிவசங்கரனேயுரு........................................*
வாணும்பெண்ணுமவியுமலாவுணக்.....................................*
தாணுமாறெவன்காட்சியருள்சிராத்..................................*
தாணுவாழுஞ்சதாசிவதாவுற்கே..............................(சஅ)
தாதவிழ்மலர்த்தண்டலையுந்திரு....................................*
மாதுவாழ்பங்கயப்பெருவாவியு.......................................*
மோதுவேதவொலியுஞ்செறிசிரா.....................................*
மாதிரப்பெருமானெனையாள்வையே.............................(சகூ)
என்னைவிட்டொழிந்தேகுதல்செய்குவாய்ப்...........................*
பொன்னைமண்ணைப்பெண்டிர்களைப்போற்றவா.......................*
மன்னுமாலயன்வாழ்த்துஞ்சிராமலைத்................................*
தன்னையாளுந்தயாபரமூர்த்தியே................................(ருய)

[வேறு]

மூர்த்தியயனரிமகவாற்கரியசோதி.....................................*
முனிவரர்கடவயோகர்க்கருளும்யோகி....................*
பார்த்திவரியுயர்வரவர்மரபுளோன்வன்.................................*
பராந்தகச்சோழனைச்சாரமுனிவற்காகக்....................*
கீர்த்திவிரியுறந்தையினிக்கிரகஞ்செய்த.............................*
கிளரொளிவெண்ணீறணியுமெண்டோளாதி....................*
சீர்த்திவளர்சிரகிரிவாழநாதியின்பூஞ்.................................*
சேவடிவாழ்த்தினரொன்றும்பிறவார்நெஞ்சே.....(ருக)
நெஞ்சமுருக்கோசிவயோகருந்தாதோசொன்.............................*
னீதியறமறிவொழுக்கம்பொறையுமின்றி....................*
நஞ்சமுறமரவென்னச்சீறியோடி.....................................*
நன்னெறியுள்ளோர்தம்மைநடுங்கப்பாய்வேன்....................*
பஞ்சமலமறுப்பதெவனிலங்கைக்கோனைப்...............................*
படர்வரைக்கீழழுத்தியவெம்பெருமானேவிண்....................*
ணஞ்சவுயர்சிரகிரிமீதமருமுக்கண்.....................................*
ணுதியேவற்புதமேயமரர்கோவே..........................(ருஉ)
அமரர்முதலனைவரையுமவையுதித்த.....................................*
வாலமயின்றன்பொடுகாத்தவித்தவெந்தாய்....................*
சமர்பொருதாருகன்மாளச்செற்றகோலச்.................................*
சண்முகனையீன்றதனிச்சுடரோயோங்கி....................*
திமிருபனிமலையுதவுகொடியையோர்பா,.................................*

னிரந்தரம்வைத்தருள்பரனே நாளுநாயேன் ............... *
குமரியர்கூர்விழியயிலாற்கொலையுழுதுன் . ....... ...... . .... *
கோகநகப்பதமலருந்திருப்பதென்றோ . .... .... (௫௩)

என்றுமியானெனதெனும்பொல்லாப்பற்றுரு ....... ...... .. *
மிருவகைப்பேயெனைப்பிடித்துப்பிடுங்கிவாட்டித் .. *
தின்றுமலக்குழிவீழ்த்தப்பட்டுச்சோருந் ......... ......... ..... *
தீவினையேற்கருடரவெள்விடைமேல்வாரா.... ... ..... *
யன்றுசனகாதிபருக்குபதேசித்த... ..... ....... .... ........... *
வமிர்தமேயினியசுவைக்கடலேசெம்பொற் ........ ..... *
குன்றைநிகரொனவுயருந்திரிசிராநற்.... ........................... *
கோயிலெழுந்தருடதும்பிப்பொழியுந்தேனே ...(௫௪)

தேனொழுகுமலர்க்காவிற்பொறிவண்டீட்டந் ....... .......... *
தென்னிடத்தண்பணையிலெழுஞ்சேல்கண்மீப்போய் *
வானொழுகுங்கழுகினறுங்குலைகள்சிந்த ......... .... ............ *
வவிதினறைதருமருதவேலிசூழ்ந்த........ .................. *
மானொழுசுஞ்சிரகிரிமெய்ச்சுடரேமுக்கண்.. . .... ............ *
மாமணியேசிவஞானப்பொருளேசெவ்வாய்க் .. ......... *
கானொழுகுங்குழலியர்கண்வலைக்குட்சிக்கிக்......... ............ *
கலங்கியுளநடுங்குமெனைக்காத்தாள்வாயே... .....(௫௫)

ஆளுனக்கேயாகும்வண்ணங்கொடும்பாவிக்கோ ................ *
ரருணிறைந்தமெய்ஞ்ஞானப்பொருளைக்காட்டு....... *
நாள்வரக்கூடிடமகிழ்வாயெந்தாய்முக்கண்..... ... ............ *
னாதனேவெள்ளிமன்றுணடித்ததேவே.... .................. *
வேள்வயங்கொண்டிடநின்னைமலராலெய்ய ................ ... *
விழிக்கனலாலவனையெரித்திட்டநம்பா . ..... ........... *
நீள்சடையிற்கங்கைமதிதரித்தெஞ்ஞான்று .... ................ *
நிலையாகச்சிரகிரிவாழையவின்றே ... ................. (௫௬)

ஐயமறப்பிருதிவிமுன்னானபூத .... ................................. *
மறியவெளிப்படுத்திநெடுஞ்சிலைநேர்நெஞ்சை ..... .. *
நையநறுக்கிடச்செய்துகாமமாதி........ ........................ *
நாசமுறவாணவக்காடுலையப்போக்கி............... ...... *
துய்யமலர்ப்பதமெனதுசென்னிமீது ........ ........ ........... *
சூட்டியருடருமழவெள்விடையானேவெம் .. .......... *
பையரவின்மேற்றுயிலுமாலுஞ்செய்ய, . .................... *

பங்கயனும்வணங்குசிரகிரியெம்மானே............(௫௭)
சிராத்திரிவாழ்சிவபெருமானசுரர்மேவுந்.........................*
திரிபுராந்தகன்றிருத்தாளிணையையெல்லு..................*
மிராத்திரியுமருமலராற்பூசித்தோர்க..................................*
ளிமையவர்வாழ்த்திடவிந்திரபோகந்துய்த்துக்..........*
கராத்திரிவல்விலங்குயவவ்விடங்களைச்சக் .... ...........*
கரத்தாற்கொன்றவற்கரியபதஞ்சேர்வாரென்.........*
றராத்திரியச்சடையவன்சொல்லாகமங்க......... ... ..........*
ளறைதருமானிடர்காளவ்வணஞ்செய்விரோ..... ...(௫௮)

செய்யகமேய்வனயுயிர்த்தவாரமுஞ்செந்..................*
திருமலர்தண்டரனுமும்வெண்ணிலவுவீச......... ........*
வெய்யவனற்குவிகுமுதமலர்மென்பால்சூழ்...... ..........*
விண்டொடுபொற்சிரகிரிச்செவ்வந்திநாதா....... .......*
வையகப்பேயெனப்பிடித்துவிடயமாந்தீ .... ... ............*
வனத்திலேகொடுபோயைம்பொறியாமாவின் ..........*
கையகத்தீந்திடப்பெற்றுநலிவுற்றேனுன்.... .... .. ...........*
கடத்தேறும்வகையெவனோவறிகிலேனே .... ..... (௫௯)

அறிஞர்சுரர்வணக்கிடமாலயனுஞ்செவ்வி.... .... ...............*
யாலவட்டமெடுத்தெதிரோவீசச்சோதி....... ..............*
யெறிமணிப்பொற்சிரகிரிவாழரனேமுக்கண் ....................*
ணிறையவனேமட்டுவார்குழலிபாகா .. .......... ...........*
தறிசிதைக்குங்குஞ்சரமாவுரியைப்போர்த்த..... ..........*
தயாபரனேசச்சிதானந்தனேசொல்.............................*
வறிஞர்கடம்நிதியேயென்கவியுநோயு..............................*
மாற்றிவனர்சிவபோகநல்கிடாயே............ .........(௬௰)

[வேறு]

நல்லவர் சொல்லற நன்றி மறந்தே.............. ............*
னில்லவள் சேய்நிவை யென்று துணிந்தேன்..............*
வல்வினை யேன்செல் வழியருள் வாயஞ்...................*
செல்வனு ரும்முயர் சிரகிரி யானே......... ...... ....... (௬௧)

சிரகிரி வாழர னேசிவ னேபை.................. .. ...............*
யரவுடன் வெள்ளறு கம்புவி யக்குச் ....... ......................*
சிரமணி தற்பர னேசிறி யேற்குன் .. ........... ..... ............*
வரமுறு நல்லடி வாழ்வருள் வாயே..................... (௬௨)

MAHOPADHYAYA ... LIBRARY

ஏடலர் தாமரை யில்வளர் வோனு ...................... *
மாடர வின்மிசை யறிதுயில் வோனுஞ் ...................... *
சேடுற விழைவுகொள் சிரகிரி யானே ...................... *
வீடென நின்னடி மேவுத ரூனே ...................... (௬௩)

தாரணி யோர்துதி சங்கர னேபொன் ...................... *
வாரணி மாமுலை மங்கைய ராடுஞ் ...................... *
சீரணி மறுகொளிர் சிரகிரி யாயுன் ...................... *
னாரணி யடியரி லன்பிலன் யானே ...................... (௬௪)

அன்புற் றமரர்க ளஞ்சலி செய்யும் ...................... *
பொன்செற் றொளிர்சிர புரம்வளர் பெம்மா ...................... *
னன்பொற் கழலிணை நசையொடு நெஞ்சே ...................... *
யுன்பற் றறவிணை யோடிடு மின்றே ...................... (௬௫)

ஓடிடு நோய்கவி யுன்னருள் சேரக் ...................... *
கூடிடும் வுள்ளுரு குங்குண மில்லேன் ...................... *
வாடிட நின்றனன் மாளிகை மன்னுஞ் ...................... *
சேடுற வேவளர் சிரகிரி யானே ...................... (௬௬)

ஆன்றவர் போற்றிடு மம்பிகை பாகா ...................... *
வான்றட வும்மொளி வளர்சிர நாகா ...................... *
மீன்றிகழ் கண்ணியர் மேன்மய லாகா ...................... *
தான்றிரி யாவரு ணல்கியா ளாயே ...................... (௬௭)

ஆயுமை பங்கி லமர்ந்தரு டேவே ...................... *
வாயிரு சுடர்வலம் வருசிர கிரியாய் ...................... *
மாய்வுறு மிப்புவி வாழ்வினை யோம்பித் ...................... *
தேய்வுற வீதியோ தீவினை யேனே ...................... (௬௮)

தீவிய தல்புனை சிரகிரி யானே ...................... *
மேவி யடியார் வினையொழிப் பானே ...................... *
யாவியு டல்விடு மன்றடி யேனுன் ...................... *
மாவிரு பொற்கழல் வந்தனை வேனே ...................... (௬௯)

வந்தனை செய்திடு மாமறை யோன்றன் ...................... *
பந்தனை மாற்றிய பார்ப்பதி நேயா ...................... *
செந்திரு மேவுஞ் சிராமலை யாயென் ...................... *
சிந்தனை யுன்வசஞ் செய்திடு வாயே ...................... (௭௰)

(வேறு)

செய்வாயனங்கள்பயில்வேலிசூழ்நற்சிரநாகநம்பர்விடமா *
ரைவாயராவில்விழிதுஞ்சுமாலுமயனும்பராவிநெடுநாள் [வ்
மெய்வாடிநின்றுதேடுஞ்சிறந்தவிடையாளர்முக்கணவர்சொ
சைவாகமத்தின்வழிசென்றந்நாதர்சரணுடுவாயென்மனமே *

மனமாரழற்கண்மெழுகாகநின்றன்மருமாமலர்ச்சேவடி.....*
தினமாறுகாலம்வழுவாமனின்றுதிகழப்பராவுமடியார் ... *
வனமாரடிக்குவழிபாடிழைக்கவரமென்றனக்குமுளதோ ..*
கனமாடுயர்ந்தசிரநாதவந்தகவுணமோதுமுத்திமுதலே (௭௨)

முதலேயராவெண்மதிவேணிநம்பர்முக்கண்ணர்நித்தர்நிமலர்
சதமானசென்னிவரைநாதர்விண்ணில்சசிகாதல்கூருமகவா [ர்
னிதமாகவந்துதொழுநீலகண்டரிளவெள்விடைக்கணுடையா
பதமாமலர்க்குவழிபாடுளோர்கள்பவநோயொழித்துய்வரோ

பவவேலையூடுமிகவேவிழுந்துபடும்வாதையுன்றனருள்கூர் *
நவமேவுமம்பொனடிவந்துகூடினனுமோமறுத்துமெலண
யே-நுவனேமியாளர்கதையாளரின்பநுகர்வானிறைஞ்சுமுத
லே-சிவபோதநந்திகணநாதநம்பசிரநாகவெல்கணமணியே

மணியாரமம்பொனலைவீசுபொன்னிவளர்தென்கரைக்கணு
விசேர்- பணியாமனந்தன்முடிமீதுவைத்தபடியோர்வழுத்
தவுயர்மா - வணியார்பவங்களறநின்றமுத்தியருளுஞ்சிரத்தி
ரியில்வாழ்-. மணியார்மிடற்றரடியாரெவர்க்குமலநோயொ
ழிப்பர்மிகவே ............ ............ ... ............(௭௫)

மிகவேதகீதவொலிமன்னுவீதிமேவுஞ்சிரத்திரியுளான் ......*
முகமாறுகொண்டபெருமானையீன்றமுன்னோனெவர்க்கும
ரியான் -சகநாதன்வெள்ளிமலைநாதன்முத்திதருமட்டுவார்கு
ழலிபாற்- றிகழாதிதேவன்விடைமீதெழுந்துதெளியச்செய்
தாள்வனெனையே ............ ............ ... ... ... (௭௬)

எணமோதும்வெய்யமிடிநோய்கடரவிதமான்வின்பமருவ்
வோர்- நினையன்றியிலையருளேசிராத்திரி நிலையாகவாழு
முதலே-யுனையன்றுநன்குபூசித்தநால்வருரைபைந்தமிழ்க்
கவிதையே - புனைநாதனேவெள்விடையாளனேதண்புரிகங்
கைவேணியரனே............ ............ .. (௭௭)

அரவின்றன்வாயிலுறுதேரையொப்ப வழியாமலென்றுநி
லையப் - பரவின்பநல்குமுனதாம்புயத்தின்பதமென்றனக்க

ருளுவாய் - வரநாதனேவெள் விடையாளனேபொன் வளர் மார்பனஞ்சவிசெயுஞ் சிரநாகனேவெண்மதிவேணிநம்பசிவ னேமெய்ஞ்ஞானமுதலே ... .... .... ............ .... ..... ..(எஅ)

மெய்யாவலாரியயனுதியோரும்வெருவாய்ப்பராவியுணரா ✻
வையாசெவ்வந்திநாதாவிடைக்கணமர்கின்றவேணியரனே ✻
பொய்யாமுலோகவாழ்வுக்குளான புலைநெஞ்சனேனையடி
மை - செய்யாமல்வாடினேனென்னையாண்டுசிறுமைத்தவிர்
த்தருள்வையே ........................ ... .... ..........................(எகூ)

சிறுமைக்குளாகுமடமாதர்மீதுசெயுமாசையிம்மையுடனே
மறுமைக்குநன்மையாகாதுபாவிமயறீரும்வண்ணமருள்வாய்
குறுமாமுனிக்குவரமேயளித்தகோவேயெவர்க்குமரசே [னே
நறுமா மலர்க்குள் வளர்தேவன் வாழ்த்து நாதாசிராத்திரியர

[வேறு]

அரவணியிலகுவேணியமலனேகமலயோனி.......... .... ........✻
பரவிடச்சிரநாகம்வாழ்பரமனேவிமலநீயென்..................✻
கரமுடியேற்றியுன்னைக்கருதியான்வாழ்த்திப்போற்ற......✻
வரநனியருளிச்செய்தாய்மயக்கறவடியேற்கின்றே .... .(அக)

இன்றுயிர்க்கிடும்பையாற்றுமிருண்மலமணைத்துமாறிச்...✻
சென்றிடவோட்டிநன்மைசெறிந்தபேரின்பநல்காய்க்.......✻
குன்றுவில்லாகக்கொண்டகோலமழுவாளியேபொன்.... .✻
மன்றுளாடியவஞ்சென்னிவரையமர்ந்திடுமெம்மானே(அஉ)

மான்மழுச்சூலமேந்தும்வள்ளலேசிரநாகம்வாழ்... ..........✻
தேன்வழிந்தொழுகுங்கொன்றைத்திகழ்சடையானேபாவந்✻
தானெனைத்தொடராவண்ணந்தஞ்சமென்றுனையடைந்தே
னுன்கடத்தேறுதற்கோர்நல்லருள்சுரந்தாள்வாயே..(அங)

சுரர்முதலனைவர்கட்குந்துதித்திடற்கரிதென்றுவு ............✻
நரர்களிலொருவனுனநானுனைப்போற்றிக்கண்டே...... ......✻
னிரவினிலாசூரற்கேயின்புறத்தூதுசென்ற ......................✻
பரவிடுசிரநாகம்வாழ்பரமனேகயிலையானே ... ........(அச)

கைதவமுடையோர்தம்பாற்கனவிலுமுறவுகொள்ளாச். ...✻
செய்தவமெனக்கீந்தாளச்சிறந்தவெள்விடைமேல்வாராய்..✻
மைதவழ்சிரநாகம்வாழ்மாசிலாமணியேசெங்கை............ ✻
நெய்தவழ்வேலனுங்கந்தனையருணிமலநீயே ..... .......(அரு)

3969(8 1(7))

நீயெனையடிமைகொண்டா னின்பணிவிடையான்கொண்டே
வாயி னுன் றிருநாமங்கண் மறப்பிலா துரைத்து நாளுந் ..... *
தூய்மலர்க்கொண்டுபூசை துணிவுடனியற்றேனோநற்....... *
றுயினிலினிமைநல்குந்தனிச்சிராமலையெம்மானே.... (௮௬)

தனிச்சிராமலையில்வாழுந்தாணுவேயமரர்கோவே.... ....... *
யினிப்புறுகனியேதேனேயெய்திடாவமுதேயார்க்குங்...... *
குனிப்புறுவெள்ளிமன்றுட்கொன்றைவேணியனேநாயேன்
றுனிப்புறுசெயலைநீக்குந்தொன்னெறியடைந்திலேனே. *

தொன்னெறிப் படிசென் றுன்னைத் தொழுதிடா திருந்தநா
பன்னெறிவிட்டுநின் றன்பதம்பணிந்திடச்செய்தாண்ட[யேன்
வின்னெறிவியப்பாமியார்க்குமிறைவனேபரமனேசொல் ... *
நன்னெறியாளரோத்தநணுஞ்சிரகிரிவாழ்தேவே.........(௮௮)

தேவராதியரும்போற்றித்தெரிசிக்கச்சிராமலைக்கண் ...... *
ணுவலாமுமையாடன்னோடமர்பெருமானேயிந்த.... ..... ....*
நாவலமுதலாந்தீவார்நம்பிவாழ்த்திடுமுன்னோனே.... .....*
நாவலர்க்கரசேநின்னைநானினிமறந்திடேனே...........(௮௯)

மறத்தொழிலியற்றும்போது மங்கையரிடத்தின்மோக ......*
முறத்தொழிலடைத்தும்போதுமுண்டுலகுலவும்போது.....*
முறக்கமேவிடுமப்போதுமுனதிடத்துறுமென்சிந்தை .....*
சிறக்கவிண்ணுடர்போற்றுஞ்சிராமலைவாழெம்மானே.(௯௰)

(வேறு)

மான்வி ழிப்பரத் தையர்கண் மையலா ..... ................. *
னுன்மி கத்தின நலிவுறு தெடுத்.............................. *
தான்சி ராத்திரித் தற்பரன் பெரு..... ..... ................... *
மான்வி டைக்கண்வந் தருளு மையனே ..................(௯௧)

ஐயனே நின மடியர் நெஞ்சில்வாழ் ...... ...................*
மெய்யனே சிரா மலையில் வேதனே.............................*
வெய்ய கூ ற்றுவன் வீசு பாசமென் ...........................*
செய்யு நின்னருட் டிற னிருக்கவே.........................(௯௨)

இருபத நின தென்றலைக் கணி..................................*
மருமல ரதா மன்சி ராமலை . .............. ......... ... *
மருவு மட்டுவார் குழலி மாண்பனே .... ..... ....... ........*
யருமறை நவி லந்தி வண்ணனே....... ..................(௯௩)

வண்ண மார்சிரா மலையின் மேவிய ............ *
வண்ண ருண்மல ரஞ்ச வித்திடார் ............ *
மண்ணி னிற்பெரு மாயை யின்வயத் ............ *
தெண்ண ருந்துய ரெய்தி மாய்வரோ ............ (௧௪)

மாய்வி லாதவோர் வரமெ னக்கரு ............ *
டேய்வி லாதொளிர் திரிசி ராப்பளி ............ *
யாய்வில் குன்றெடுத் தைய மெய்யனே ............ *
வோய்வி லாதசீ ருடைய நம்பனே ............ (௧௫)

நம்பு நின்னிடத் தன்றி யென்மன ............ *
தம்பு நேர்விழி யார்கள் பாற்செலா ............ *
தம்பு யத்தனோ டரிதொ ழும்மொளி ............ *
பம்பு மால்சிராப் பள்ளி வாசனே ............ (௧௬)

வாசமா மலர்க் கேச மங்கையர் ............ *
பாச மென்றவணப் பற்றி டாதரு ............ *
வீசனே திக ழெழிலு றும் பளா ............ *
நேசனே சிரா மலை நிமலனே ............ (௧௭)

நிமலனே மறைப் பொருளி னின்றிடு ............ *
மமலனே சிரா மலையி னையனே ............ *
குமர னைத்தருங் கொன்றை சூடிய ............ *
விமல வெற்குறும் வினையை நீக்கிடே ............ (௧௮)

நீதி யானநன் னெறியு ளோர்தொழு ............ *
மாதி தேவனே யஞ்சி ராமலைச் ............ *
சோதியே வினைத் தொடரொ னக்கறப் ............ *
பூதி தந்தருட் புடவி வாழ்த்தவே ............ (௧௯)

வாழ்த்தி யுள்குபு வணங்கி வானவர் ............ *
சூழ்த்தி டுஞ்சிரா மலையிற் றூயனே ............ *
பாழ்த்த நாயினேன் பாடுமா றரு ............ *
டாழ்த்த மும்மலந் தபுநின் சீர்களே ............ (௨௰)

பதிற்றுப்பத்தந்தாதி

முற்றிற்றுமுற்றும்.